1975 மார்ச் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசைப் பொறுத்து அப்படிப்பட்ட வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான் இருக்கிறது. இதைத் தான் பல்கலைக் கழகங்களுக்கு அரசு பரிவுரை செய்திருக்கிறது. இந்த ஆண்டிலேயே செய்யவேண்டுமென்ற முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*Teachers Council*

* Q. 202.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism with reference to question No. 583 answered on the floor of the Assembly on 31-3-1973 be pleased to state the present stage of the proposal for the formation of Teachers Council for teachers in Elementary Schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆசிரியர்களுக்காக மன்றம் ஒன்று அமைத்திடுவது தேவையில்லை என அரசு கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த கோரிக்கையை நீண்ட நெடுங்காலமாக இந்த ஆசிரியர் கூட்டணி கேட்டுக் கொண்டு வருகிறார்களே, இதைப் பற்றி மறு பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு ஆலோசனை உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதை அரசு பல தடவை ஆராய்ந்து பார்த்தது. பொதுவாக டீச்சர்ஸ் கவுன்சில் ஒன்று, இன்டியன் மெடிகல் கவுன்சில், பார் கவுன்சில் அடிப்படையில் வைக்கலாம் என்று ஆராய்ந்து பார்த்ததில் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது. அந்த இரண்டு துறைகளுக்கும் அப்படிப்பட்ட கவுன்சில்கள் தேவைப்படுகின்றன. தொழில் துறையில் தவறுசெய்யும் டாக்டர்கள் மீதும், வக்கீல்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தந்த கவுன்சில்கள் எடுக்கின்றன. அந்தந்த தொழில்களின் மதிப்பு கெடாமலும் அவைகள் பார்த்துக் கொள்கின்றன. அப்படிப்பட்ட பார் கவுன்சில் போன்று மெடிகல் கவுன்சில் போன்று ஆசிரியர்களுக்கு அவசியமில்லை. ஏனென்றால் ஆசிரியர்களுக்கு விதிமுறைகள் போன்று பல்வேறு வகைகளை ஏற்பாடு செய்திருக்கிறோம். அவர்களைக் கண்காணிப்பதற்கு அதிகாரிகள், துறைகள் இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் அவர்களுக்கு மேலும் கட்டுப்பாடுகள் கொண்டு வராமல் ஆசிரியர்கள் கடமை உணர்ச்சி வளர வளர அந்தத் தொழில் துறை வளரவேண்டுமென்று, கருதுகிறோம். இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாமல் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறபோது தவறுகள் ஏற்பட்டால் அவர்களைத் திருத்துவதற்கு இப்போதே விதி முறைகள் இருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது மாணவர், ஆசிரியர் பிரச்சினை பல பள்ளிகளில் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிற முறையிலே ஆசிரியர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இந்தப் பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறுகிற அவசியம் ஏற்படுகிறது. ஆகவே இந்த ஆசிரியர் கவுன்சில் அமைப்பது நலமாக இருக்கும் என்பதை அரசு உணருமா? அப்படி உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்தந்த பள்ளிகளில் ஏற்படுகிற பிரச்சினைகளைத் தீர்க்க தனிக் குழு அமைக்கலாம் என்று அரசு தெரிவித்து இருக்கிறது. முக்கியமாக பாபுலர் டீச்சர்ஸ் என்ற அளவிற்கு மாணவர்களிடத்தில் செல்வாக்கு படைத்த ஆசிரியர்கள், பெற்றோர் பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட குழு அமைத்து அந்தந்த கல்வி நிலையங்களில் உள்ள தகராறுகளைத் தீர்க்கலாம். அது நல்ல யோசனை. பார் கவுன்சில் மாதிரி, மெடிகல் கவுன்சில் மாதிரி அமைக்கவேண்டுமென்பது தான் தேவையில்லை என்றேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி ஆசிரியர் கவுன்சில் என்று அமைக்கவில்லையென்றாலும் கூட ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அடங்கிய குழுவை அமைத்தால் பள்ளியில் மாணவர்களிடையே ஏற்படுகிற குழப்பத் தன்மைகளைப் பரிசீலனை செய்து ஆசிரியர், பெற்றோர் குழுவே சீரமைக்க வழியாக இருக்குமே, அப்படிப்பட்ட குழுக்களை அமைக்க அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆசிரியர்கள், பெற்றோர்கள் சங்கம் என்று பெரும்பாலான பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பல பள்ளிகளில்

1975 மார்ச் 6]

ஏற்படுத்த வேண்டுமென்ற நிலை இருக்கிறது. மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் கூட ஆசிரியர்கள் பெற்றோர்கள் சங்கம் ஆண்டுக்கு ஆண்டு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிட்டத் தட்ட 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர் பெற்றோர் சங்கங்கள் இருக்கின்றன. 32 ஆயிரம் பள்ளிகளில் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் உள்ளன. அண்மையில் அகில இந்திய அளவிலே ஆசிரியர்கள் பெற்றோர்கள் சங்க மாநாடு சென்னையில் நான்கு நாட்கள் நடைபெற்றது. இப்படிப்பட்ட தன்மையில் ஆசிரியர்கள் கவுன்சில் தேவையில்லை என்பது அரசின் கருத்து. பள்ளிக்குப் பள்ளி இப்படிப்பட்ட சங்கங்களை நிறுவவேண்டுமென்று, அப்படி நிறுவு வதற்கு குழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளை நூலகங்கள்

* 203 வினா—திரு. வி. ஆலடி அருணா: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் 1966–67ல் செயல்பட்ட கிளை நூலகங்கள் எத்தனை? 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1966–67ல் செயல்பட்ட கிளை நூலகங்கள் மற்றும் 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் மாவட்ட நூலக ஆணைக்குழு வாரியாக விவரம் பின் வருமாறு:—

| வ. எண். | மாவட்ட நூலக ஆணைக்குழு | 1966–67ல் செயல் பட்ட கிளை நூல கங்கள் | 1974–75ல் உள்ள கிளை நூலகங்கள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செங்கற்பட்டு | 109 | 117 |
| 2. | கோயம்புத்தூர் | 195 | 192 |
| 3. | தருமபுரி | ... | 35 |
| 4. | சென்னை | 105 | 120 |
| 5. | மதுரை | 154 | 159 |
| 6. | நீலகிரி | 31 | 35 |
| 7. | வடஆற்காடு | 83 | 88 |